கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஹைவேஸ் குடியிருப்பு பகுதியில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட திராவிடர் கழகம் சார்பில், நீட் தேர்வில் நடைபெற்ற முறைகேட்டை கண்டித்து பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் கழகம் மாவட்ட தலைவர் சி.தங்கராசு தலைமை வகித்தார். தி.மு.க.மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், திராவிடர் கழக மாநில மாணவரணி செயலாளர் செந்தூர பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இதில் பெரம்பலூர் நகர கழகச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், தி.மு.க. மாவட்ட கழக பொருளாளர் செ.ரவிச்சந்திரன், மாவட்ட மருத்துவரணி தலைவர் டாக்டர் ST.ஜெயலட்சுமி, விடுதலை சிறுத்தைகள் கட்சி (மே) மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார், இந்திய தொழிலாளர்கள் கட்சியின் தலைவர் பெ.ஈஸ்வரன், ம.தி.மு..க மாவட்ட செயலாளர் ஜெயசீலன் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சேலம் கிழக்கு மாவட்டத்தில்

சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்குழு வருகை!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!

சேலம், மே. 18-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் 14052026 அன்று சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற "தி.மு.க மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்" அறிவித்ததற்கிணங்க, நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து "கள ஆய்வு" குழு திருமிகு. வழக்கறிஞர் ஏ.சரவணன், மற்றும் திருமிகு.நா.இளையராஜா ஆகியோர் சேலம் கிழக்கு மாவட்டத்தில் தொகுதிவாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு மாவட்ட செயலாளர், வேட்பாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், தொகுதிக் குட்பட்ட செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய பேரூர் கழகச் செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள், உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளையும் நேரடியாக சந்தித்து கருத்துக்களையும், அவர்களின் பரிந்துரைகளையும் காலை முதல் மதியத்திற்குள் பெற்று இந்த சந்திப்பின்னை நிறைவு செய்த விட்டு மதியத்திற்கு மேல் சார்பு அணிகளை சேர்ந்த மாநில மாவட்ட நிர்வாகிகளை தனித்தனி குழுக்களாக சந்திக்க பின்வரும் பட்டியல்படி வருகை தர உள்ளனர், அது சமயம் தொகுதிக்குட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்காடு -18/05/2026 பிற்பகல் 03.00மணி - சேலம் கிழக்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதி.மு.க.ஸ்டாலின் அறிவாலயம், வாழப்பாடி

கெங்கவல்லி - 19/05/2026 காலை 10.00 மணி - சக்தி ரெசிடென்சி தலைவாசல்

வீரபாண்டி - 20/05/2026 காலை 10.00 மணி - மெட்ராஸ் மெஸ் திவ்யம் தியேட்டர் அருகில், கொண்டலாம்பட்டி

ஆத்தூர் - 21/05/2026 காலை 10.00 மணி- ஆத்தூர் A2B ஹோட்டல்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி

சேலம் கோட்டை மைதானத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் கண்டன உரை!

சேலம், மே 18 -

நீட் தேர்வை ரத்து செய்திட வலியுறுத்தி சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் கலந்து கொண்டு நீட் தேர்வை கண்டித்து முழக்கங்களை எழுப்பினார்

திராவிடர் கழகத்தின் சார்பில் இந்தியா முழுமையும் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி சேலம் கோட்டை மைதானத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திராவிடர் கழகத்தின் சேலம் மாவட்ட தலைவர் வீரமணி ராஜு தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சர்ருமான ராஜேந்திரன் துவக்கி வைத்து நீட் தேர்வை கண்டித்து முழக்கங்களை எழுப்பினார்.

உன்னை தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்படும் தொடர்ந்து மாணவர்களின் மருத்துவ கனவை நசுக்கும் நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத்தின் மாவட்ட செயலாளர் சரவணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் பிரவீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இஸ்லாமிய ஜனநாயக பேரவை மாநில செயலாளர் காஜா மொய்தீன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் சையத் மூஸா ஆதித்தமிழர் பேரவையின் மாவட்ட செயலாளர் சந்திரன், சேலம் மத்திய மாவட்ட திமுக பொருளாளர் கார்த்திகேயன் மாநகர செயலாளர் ரகுபதி உள்ளிட்ட திராவிடர் கழகம், மார்க்ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில்

நீட் தேர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

வீ.ஜெகதீசன் – முன்னணியினர் பங்கேற்பு!

பெரம்பலூர்,மே 18 –

பெரம்பலூர் மாவட்ட திராவிடர் கழகம் சார்பில், நீட் தேர்வில் நடைபெற்ற முறைகேட்டை கண்டித்து பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் கழகம் மாவட்ட தலைவர் சி.தங்கராசு தலைமை வகித்தார். தி.மு.க.மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், திராவிடர் கழக மாநில மாணவரணி செயலாளர் செந்தூர பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இதில் திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் ஒரத்தநாடு குணசேகரன், நகர செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட கழக பொருளாளர் செ. ரவிச்சந்திரன்,மாவட்ட மருத்துவரணி தலைவர் டாக்டர் ST.ஜெய லட்சுமி, விடுதலை சிறுத்தைகள் கட்சி (மே) மாவட்ட செயலாளர் கிருஷ்ண குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எழுத்தாளர் எட்வின்,பகுத்தறிவாளர் கழகம் மாவட்ட தலைவர் நடராசன், ஆத்தூர் முருகா னந்தம்,விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் காவிரி நாடன், ம.தி.மு..க மாவட்ட செயலாளர் ஜெயசீலன் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தஞ்சை வடக்கு மாவட்டம் முழுவதும்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம் – மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிவிப்பு!

தஞ்சாவூர் மே.18.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது உட்பட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் 16.05.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகம், அண்ணா அரண்மனையில் மாவட்ட அவைத் தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாவட்ட கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், சாஸ்தா நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் நம் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் சட்டமன்ற தொகுதிகளில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்காக ஓய்வின்றி கடுமையான தேர்தல் பணியாற்றிய முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள் - இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தின் உடன் பிறப்புகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், கழக கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்கள் அனைவருக்கும் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் இக்கூட்டத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் திருவிடைமருதூர் தொகுதியில் தி.மு.க சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள முனைவர் கோவி.செழியன் அவர்களையும், பாபநாசம் தொகுதியில் ஐ.யு.எம்.எல் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள ஏ.எம்.ஷாஜகான் அவர்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக வாழ்த்தி மகிழ்கிறோம்.

இந்தியாவில் பல பிரதமர்களை உருவாக்கி இந்திய ஒன்றியத்தின் வளர்ச்சிக்காகவும், வாழ்நாள் காலம் முழுவதும் தமிழ் நாட்டு மக்களுக்காகவும். தமிழுக்காகவும் ஓயாமல் உழைத்து வங்க கடலோரம் ஓய்வெடுக்கும் தமிழ் மக்களின் பிதாமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 ஆம் ஆண்டு பிறந்தநாளை கொண்டாட உள்ளோம். வருடா வருடம் கொண்டாடுவதை போல் இந்த வருடமும் மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் கிளை கழகங்களில் கழக இருவர்ண கொடியேற்றி, கழக பாடல்களையும், பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்த மிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோரது பேச்சுகளை ஒலிப்பரப்பியும், பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், ஜூன் மாதம் முழுவதும், ஆதரவற்ற முதியோர் இல்லம், ஆதரவற்ற சிறுவர்கள் இல்லங்களில் அறுஞ்சுவை உணவு வழங்கியும், அரசு மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பாக கொண்ட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களையும், சார்பு அணிகளின் நிர்வாகிகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறோம்.

18.05.2026 திங்கள் அன்று தஞ்சாவூர் மஹாராஜா திருமண மண்டபத்தில் நடைபெற உள்ள திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் திரு. பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், 17-05-2026 அன்று மாலை 6:00 மணியளவில் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் அருகில் வரவேற்கும் நிகழ்வில் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டு கொள்கிறோம்.

2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலில் சட்டமன்றத்தில் எதிர்கட்சியாக பணியாற்றிட மக்கள் வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். நம் கழகம் பார்க்காத வெற்றியும் இல்லை, தோல்வியும் இல்லை. வெற்றிபெற்ற போதெல்லாம் மக்களுக்கு ஓடி ஓடி மக்கள் நலத்திட்டங்களை வழங்கி தொண்டாற்றினோம், தோல்வியடைந்த போதெல்லாம் இன்னும் பொதுமக்களுக்க என்ன தேவை என்பதை அறிந்து கொண்டு மீண்டும் கழக ஆட்சி வந்தவுடன் மக்கள் எதிர்பார்க்கும் நலத்திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்துகிறோம். மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள் கூறியதை போல் "நமக்கே உரிய போர்க்குணத்துடன் - மக்கள் நலனுக்காகவும் - மாநில உரிமைக்காகவும் நம் பயணத்தை எப்போதும் போல் தொடர்வோம்!" எனவே தஞ்சை வடக்கு மாவட்ட கழகத் உடன்பிறப்புகள் மனம் தரளாமல் எப்போதும் போல் மக்களை சந்தித்து, மக்கள் தொண்டாற்றி தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்கள் பணி செய்யும் என்பதை மக்களுக்கு புரியவைக்கும் வகையில் நம் பணி இன்னும் தீவிரமாக இருக்க வேண்டும், என்பதை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக

சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் குழுவினர் நேரில் ஆய்வு!

மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி அறிக்கை!

திருப்பூர், மே.18-

திருப்பூர் தெற்கு மாவட்டக் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் உள்ள 2 சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக, சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, தலைமைக் கழகத்தால் அனுப்பப்பட்டுள்ள கழக துணை அமைப்புச் செயலாளர் ப. தாயகம் கவி, கழக சட்டத் துறை துணைச் செயலாளர் என்.மருது கணேஷ் ஆகியோர் அடங்கிய கள ஆய்வுக்குழுவினர். நம்முடைய திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதி வாரியாக உடுமலைப்பேட்டை பழனி சாலையில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கீழ் கண்ட விவரப்படி கீழ் காணும் நாட்களில் நேரில் வருகை தந்து கழக நிர்வாகிகள் அனைவரையும் தனித் தனியாக சந்தித்து பேசி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய உள்ளனர்.

20.05.2026, காலை 9.30 மணி, மற்றும் மாலை 4.00 மணி மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி.

23.05.2026, காலை 9.30 மணி, மற்றும் மாலை 4.00 மணி உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி

காலையில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, தாய்கழக நிர்வாகிகள், (மாவட்டச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2026-ல் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்க வேண்டும். குறிப்பாக தற்பொழுது பொறுப்பில் இல்லாத முன்னாள் மூத்த நிர்வாகிகளையும் கூட்டத்திற்கு கண்டிப்பாக அழைக்க வேண்டும்.

மாலை 4.00 மணிக்கு சார்பு அணிகளின் மாநில மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும்.

கூட்டத்தில் கைபேசி கட்டாயம் அனுமதி இல்லை.

கூட்டத்தில் தங்களது கருத்துக்களை கூற வரும் நிர்வாகிகள் மனுவாகவும் தரலாம் , அதே நேரத்தில் அந்த கருத்துக்களை சுருக்கமாக நேரிலும் தெரிவிக்க வேண்டும்.

எனவே சட்டமன்றத் தொகுதி வாரியாக நடைபெற உள்ள இக்கள ஆய்வின் போது அந்தந்த தொகுதியில் அடங்கி உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் அனைவரும், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இருவேளைகளிலும் நடைபெறும் இக்கள ஆய்வு நிகழ்ச்சியில் பங்கேற்கச் செய்யும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.